செய்தி வெளியீடு எண். 618 நாள்: 19.11.2019

**தொழில் நிறுவனங்கள் தொடங்க. புதிய தொழில் முனைவோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில் முனைவோராக மாற்ற உதவும் நோக்கத்தின் அடிப்படையில் "புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன வளர்ச்சித் திட்டம்" என்ற திட்டமானது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 2012-13-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தினை இவ்வாண்டு பயன்படுத்த திருவள்ளூர் மாவட்டத்தில் தொழில் துவங்குவோருக்கு தொழிற்கடன் பெற்றுத்தந்து மானியம் வழங்க ரூ.470.00 இலட்சம் தமிழக அரசால் ஒதுக்கீடு செய்து இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த நிறுவனங்களுக்கு தமிழக அரசின் 25% அதிக பட்சமாக ரூ.30 இலட்சம் மானியம், மேலும் வங்கிகள் வழங்கும் கடனுக்காக செலுத்தப்பட்ட வட்டியில் 3% வட்டி மானிய உதவியும் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் தொழில் முனைவோரின் தொழில் திட்ட மதிப்பீடு குறைந்தப்பட்சம் 10 இலட்சத்திற்கு மேல் இருக்க வேண்டும். ஆதிகப்பட்சம் திட்ட மதிப்பீடு வரம்பு ரூ. 5 கோடி ஆகும். இத்திட்டத்தின் மூலம் கடன் பெற விரும்புவோர் முதல் தலைமுறை தொழில் முனைவோராக இருக்க வேண்டும். கல்வி தகுதிகள் : அரசு அங்கீகாரம் பெற்ற பட்டப்படிப்பு, பட்டையப்படிப்பு, தொழில்நுட்ப பயிற்சி / தொழில் பயிற்சியில் தேர்ச்சி பெற்றிக்க வேண்டும். 21 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும். பொது பிரிவினருக்கு வயது 35-க்குள் இருக்க வேண்டும். பெண்கள் / தாழ்த்தப்பட்ட / பழங்குடியினர் / பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / திருநங்கையர் / மாற்றுத்திறனாளிகள் / முன்னாள் இராணுவத்தினர் வயது 45-க்குள் இருக்க வேண்டும் இத்திட்டத்தில் கடனுதவி பெறும் நபர்களுக்கு 15 நாட்கள் தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்படும் இத்திட்டத்தில் 50% பெண் தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே மத்திய அல்லது மாநில அரசின் கடன் உதவி பெற்றவர்கள் இத்திட்டத்தின் கீர் கடன் உதவி பெற இயலாது.

மேற்கண்ட தகுதி உடைய தொழில் தொடங்க ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் https:/msmeonline.tn.gov.in/needs/ index.php என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். மேலும் விவரங்களை பெற திருவள்ளூர் மாவட்ட தொழில் மைய பொது மேலாளரை அணுகி அல்லது 27666787, 27663796 9842480424 என்ற தொலைபேசி மூலமாக அணுகி பயன் பெறலாம் என திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.